(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (ஆ) இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அந்த இடத்தில் 1968-க்கு முன் 40 பேர்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது அரசாங்க புறம்போக்கு நிலம் என்றும், நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டிருந்தால், எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அதன் மதிப்பு என்ன என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி, கோவை மாவட்டம், திருப்பூர் நகரில் பெத்தசெட்டிபுரம் அரிசன மக்கள் வாழும் பகுதியில் 1967 அல்லது 1968-ல் பட்டா ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா என்பது. குறிப்பிட்ட இடத்தில் பட்டா எதுவும் கொடுக்கப்பட வில்லை. புறம்போக்கு நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டதா இல்லையா என்பதற்கு தனியாகக் கேட்டால் விசாரித்து பதிலளிக்கப்படும்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 458 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் துணை வட்டத்தில் பூதூர், பெரிய சோழியம்பாக்கம், பாலவாக்கம், எளாவூர், பழைய கும்மிடிப்பூண்டி ஆகிய அரிசன காலனி மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (1) பூதூர், பெரிய சோழியம் பாக்கத்தைப் பொறுத்தமட்டில், 4 (1) பிரிவின்கீழ் அறிவிப்புகள் ஏற்பளிக்கப் பட்டு தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. 5-ஏ விசாரணை நடைபெற வேண்டியுள்ளது.

2. பாலவாக்கம் கிராமத்தைப் பொறுத்த மட்டில், வரைவு

அறிவிப்புச் செயற்குறிப்புகள் வருவாய்த்துறை (நிலவரி) வாரியத் துடன் முடிவுபெறாமல் உள்ளன.

3. எளாவூர் பொறுத்த மட்டில் பிரிவு 6-ன் கீழ் அறிவிப்புகள் கிடைக்கப் பெற்று அரசின் பரிசிலனையில் இருக்கின்றன. கும்மிடிப்பூண்டி கிராமத்தைப் பொறுத்தமட்டில், 4(1) பிரிவின்கீழ் அறிவிப்பு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இன்னும் முடிவு பெறாமல் உள்ளன.